1994 நவம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சூரியகாந்தி திட்டத்தில் தரம் உள்ள விதைகள் அண்டை மாநிலங்களிலிருந்து வாங்கப்படுவதாக அறிகின்றேன். எவ்வளவு விதைகள் அவ்வாறு வாங்கப்படுகின்றன என்பதை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது நாமக்கல் பகுதியில் அதிகமாக சூரியகாந்தி பயிரிடுவதற்கு அரசு முயற்சி எடுத்திருப்பதைப் பற்றிய கேள்வி. அதற்குத் தனிக் கேள்வி போடலாம். (குறுக்கீடு) பதில் தருகிறீர்களா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தரமாக விதைகள் இருந்தால்தான் தரமான எண்ணெய் கிடைக்கும். எனவேதான் தரமான விதைகளை வேளாண் தொழில் கழகம் கொள்முதல் செய்கிறது. இன்றைக்கு தமிழகத்திலே வீரிய ஒட்டு விதைகளை முதல் முதலாக கொண்டுவந்து பயிரிடவேண்டும் என்ற புதிய திட்டத்தை இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். எனவேதான் இந்த ஆண்டு 2 கோடி ரூபாய்க்கு வீரிய ஒட்டு ரக விதைகளை நாங்கள் 'மினி கிட்டு'களாக, சிறுதளைப்பைகளாக இலவசமாக வினியோகம் செய்திருக்கிறோம் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 52, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

52—

தமிழ்நாட்டில் கிரானைட் கற்கள் கிடைக்குமிடங்கள்.

***36227*—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உயர்தர கிரானைட் கற்கள் எங்கெல்லாம் கிடைக்கிறது என்கிற ஆய்வை தமிழ்நாடு கனிம நிறுவனம் நடத்தியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் ஏற்றுமதிக்குகந்த கிரானைட் பாறைகள் கீழ்க்கண்ட பகுதிகளில் இருப்பதை தமிழ்நாடு கனிம நிறுவனம் ஆய்வு செய்து கண்டுள்ளது.

பெரியார், தர்மபுரி, சேலம், வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டங்களிலேயும், தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்தில் திண்டிவனம் பகுதியிலும், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் திருநீர்மலை மற்றும் புலிக்குன்றம் பகுதிகளிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெரம்பலூர் பகுதியிலும் கருப்புப் பாறைப்படிவங்கள் காணப்படுகின்றன. பெரியார் மாவட்டத்தில் சில பகுதிகளிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் சில பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பகுதிகளிலும் பச்சை வண்ணப் பாறைகள் காணப்படுகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்திலும் விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலும், திருச்சி மாவட்டம், பெரம்பலூர் பகுதியிலும் பலவண்ணப் பாறைகள் காணப்படுகின்றன. பாரடைஸோ எனப்படும் சாம்பல் நிறப் பாறைகள் தருமபுரி மாவட்டத்தில் பெருமளவுக்கு காணப்படுகின்றன. காஷ்மீர் ஒயிட் எனப்படும் வெள்ளைப் பாறைகள் மதுரை மாவட்டம் மேலூர் பகுதியிலும் நெல்லை மாவட்டத்திலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பகுதிகளிலும் காணப்படுகின்றன. புலித்தோல் தோற்றம் உள்ள பாறைகள், டைகர்ஸ் ஸ்கின் என்று சொல்லப்படுகின்ற பாறைகள், மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் காணப்படுகின்றன. மஞ்சள் வண்ணப் பாறைகள், காமராசர் மாவட்டத்தில் சில பகுதிகளில் காணப்படுகின்றன. சிவப்பு வண்ணப் பாறைகள் வ.உ. சிதம்பரனார் மாவட்டத்தில் காணப்படுகின்றன.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்தர கிரானைட் கற்கள் எங்கெல்லாம் கிடைக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். தரமான கிரானைட் கற்கள் கிடைக்கின்ற மாவட்டங்கள் அதிக அளவுக்கு அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற காரணத்தினால் அப்படிக் கிடைக்கும் வருவாயில் ஒரு தொகையினை சிறப்புத் தொகையாக அந்த மாவட்ட வளர்ச்சிப்

1994 நவம்பர் 8]

பணிகளுக்கும் தொழில் வளர்ச்சிக்கும் பயன்படுத்தி அதன் வாயிலாக தொழில் மற்றும் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் வகையில் திட்டங்கள் தீட்ட அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1993–94 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மொத்த கிரானைட் விற்பனை ரூபாய் 40 கோடியே இருபது லட்சம் ஆகும். இதில் பத்தொன்பதரை கோடி ரூபாய் லாபம் ஈட்டியுள்ளது. 35 சதவிகிதத்தை அதாவது இரண்டேமுக்கால் கோடியை அரசாங்கத்துக்கு பங்குத் தொகையாக 'டேமின் நிறுவனம்' செலுத்தியுள்ளது. இந்த பங்குத் தொகையை அரசு வேறு காரியங்களுக்கு பயன்படுத்த வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால் இதற்காக தனியாக ஒதுக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிளாக் கோல்ட் என்று சொல்லக்கூடிய இந்த கிரானைட் கற்களை வெட்டியெடுக்கும்போது சில குவாரிகளில் சில முறைகேடுகள் நடப்பதை அரசு அறியுமா? அதிக அளவில் வெட்டியெடுக்கப்பட்டும், முழுவதும் கனிம நிறுவனத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படாமல் தனியார்களுக்கு விற்பனை செய்வதை அரசு அறியுமா? இதுபோன்ற தவறுகள் செய்பவர்களைக் கண்டறிந்து, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியில் தமிழ்நாட்டில் உயர்தர கிரானைட் கற்கள் எங்கெல்லாம் கிடைக்கின்றன என்கிற ஆய்வை தமிழ்நாடு கனிம நிறுவனம் நடத்தியுள்ளதா என்றுதான் கேட்டிருக்கிறார்கள். ஆகவே இது குறித்துத் தனியாகக் கேள்வி கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இருந்தபோதிலும், எங்கெல்லாம் முறைகேடுகள் நடக்கின்றன என்பதை தமிழ்நாடு கனிம நிறுவனம் ஆய்ந்து வருகிறது. தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குத் தெரியாமல் முறைகேடுகள் நடக்குமானால், நாட்டுநலன்மீது அக்கறை கொண்டு இருக்கின்ற உறுப்பினர் போன்றவர்கள் தகுந்த புகார்கள் கொடுத்தால் அரசு தவறு செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1994 நவம்பர் 8

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உயர்தரமான கிரானைட் கற்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும்போது கடந்த காலங்களில் கடந்த அரசு இதற்குரிய உரிமம் தராததால் இங்கே வேலை செய்த தொழிலாளர்கள் அண்டை மாநிலத்திலே உள்ள குவாரிகளுக்குச் சென்று வேலை செய்து கொண்டிருந்தார்கள். அதன் பிறகு இன்று இதய தெய்வம் அவர்கள் தற்போது பட்டா நிலத்திற்கு அந்த உரிமத்தை வழங்கி விவசாயிகளுடைய மற்றும் தொழிலாளர்களுடைய வயிற்றில் பாலை வார்த்து அவர்கள் இப்போது மீண்டும் நம் மாவட்டத்திற்கு திரும்பி வந்து அந்தத் தொழிலை செய்துகொண்டு இருக்கின்றார்கள். ஆகவே பட்டா நிலத்திற்குக் கொடுத்த உரிமத்தை ரெவின்யூ நிலத்திற்கும் கொடுத்து அந்தத் தொழிலாளர்களுக்கு மேலும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-45*

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரெவின்யூ நிலத்தில் உரிமம் கொடுப்பதற்கு அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் மிக விலை உயர்ந்த கிரானைட் கற்கள் கிடைப்பதாக மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் குறிப்பிலே சொன்னார்கள். அந்தப் பகுதியிலே இருந்து கல் வெட்டி எடுக்கின்றவர்கள் அந்தக் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு சேர வேண்டிய செஸ் என்று சொல்லப்படுகின்ற வரியினை வழங்காமல் இருப்பதாக நாங்கள் அறிகிறோம். இன்றைக்கு கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்குத் தேவையான பணிகளைச் செய்வதற்கு இப்படி விலை உயர்ந்த கற்களை வெட்டிச் செல்கின்றவர்களிடத்திலே இருந்து நீங்கள் வரியை வசூல் செய்து அந்த கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வழங்குவீர்களானால் அதன்வாயிலாக

1994 நவம்பர் 8]

சிறப்பாக பணித் திட்டங்களைச் செம்மையாக செய்வதற்கு வசதியாக இருக்கும். இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று உங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. துரை முருகன்.

திரு. கே.எஸ். துரை முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இன்றைக்குக் கிடைக்கிற கிரானைட் கற்கள் எந்தெந்த வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜப்பான், ஆப்ரிக்கா, இத்தாலி போன்ற வெளிநாடுகளுக்கு எல்லாம் தமிழ்நாட்டிலிருந்து கிடைக்கிற கிரானைட் கற்களை ஏற்றுமதி செய்துகொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 53, திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

53—

அய்யூர் தெற்கு நத்தத்தில் பாலர் பள்ளியும் சத்துணவு மையமும் அமைத்தல்.

***33706–திரு. ஆர். தங்கராஜ்:**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, அய்யூர் தெற்கு நத்தத்தில் பாலர் பள்ளியும், சத்துணவு மையமும் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஆம்.